## தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை – 2017

தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதி செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கத் தகவல்களின் பொழிப்பினை உள்ளடக்கிய 2017 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் 13(1) ஆம் பிரிவு மற்றும் 1996 இன் 32 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட 1981 இன் 54 கொண்ட தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை சட்டத்தின் 32(3) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. நிதி அதிகாரச் சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் சபையின் ஆண்டறிக்கையுடன் சேர்த்துப் பிரசுரிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

### 1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத் துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

### 1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். அதியுயர் கணக்காய்வு நிறுவனங்களின் சர்வதேச நியமங்களுக்கு ஒத்ததாக (ISSAI 1000-1810) இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்கநெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந் நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் முகவராண்மையின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி முகவராண்மையின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக் கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உப பிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படையினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.4 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

## 2. நிதிக்கூற்றுக்கள்

### 2.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இந்த அறிக்கையின் 2.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்கள் நிதிக்கூற்றுக்களில் ஏற்படுத்தும் தாக்கங்களைத் தவிர, நிதிக்கூற்றுக்களானவை தேசிய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மையின் 2017 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப் பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க உண்மையாகவும் நியாயமாகவும் பிரதிபலிக்கின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 2.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.2.1 பொதுத்துறை கணக்கீட்டு நியமங்கள்

#### (அ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01

நியமத்தின் 48 ஆம் பந்தி பிரகாரம் சொத்துக்கள் மற்றும் பொறுப்பக்கள் ஒன்றுடன் ஒன்றை பதிலிட முடியாததுடன் கடன்கொடுத்தோர் கணக்கில் உள்ள ரூபா 3,278,097 ஆன வரவு மீதி கடன்கொடுத்தோர் செலவு மீதியுடன் பதிலிடப்பட்டு ரூபா 50,240,155 என காட்டப்பட்டிருந்தது.

#### (ஆ) இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 02

(i) நியமத்தின் 25 பந்தி பிரகாரம் நடைமுறை வேலைகளின் பெறுமதியான ரூபா 372,865 யை காசுப்பாய்ச்சல் கூற்றினுள் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் காட்டப்பட்டிருக்கவில்லை.

(ii) காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைளின் தேறிய காசு பாய்ச்சல் ரூபா 8,160,942 ஆக காட்டப்பட்ட போதிலும், சரியான கணிப்பீட்டின் பிரகாரம் அப் பெறுமதி ரூபா 2,816,645 ஆனமையால் காசுப்பாய்ச்சல் கூற்றில் செயற்பாட்டு நடவடிக்கைகளிலான தேறிய காசு பாய்ச்சல் ரூபா 5,344,297 கூடுதலாக காட்டப்பட்டிருந்தது.

(iii) காசுப்பாய்ச்சல் கூற்றில் முதலீட்டு நடவடிக்கையின் கீழ் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு ரூபா 70,342,795 ஆக காட்டப்பட்டிருந்த போதிலும் ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களுக்கு உரிய பேரேட்டு கணக்குகள் பரிசிலனையின் போது மீளாய்வாண்டினுள் அச் சொத்துக்கள் கொள்வனவு செய்வதற்காக பணத்தால் செலுத்தப்பட்ட தொகை ரூபா 42,063,057 என அவதானிக்கப்பட்டன.

### 2.2.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டினுள் ஆராய்ச்சிக்காக வழங்கப்பட்ட ரூபா 6,002,443 ஆன இரசாயன பொருட்கள் களஞ்சியம் ஆண்டின் செலவாக இனங்காண்பிப்பதற்கு பதிலாக இறுதி களஞ்சியக் கணக்கிற்கு வரவு வைத்ததன் காரணமாக இறுதி களஞ்சியம் ரூபா 6,002,443 யினால் கூடுதலாக மற்றும் இரசாயன பொருட்கள் பயன்பாட்டு செலவு அப் பெறுமானத்தால் குறைத்தும் காட்டப்பட்டிருந்தது.

(ஆ) 2016 ஆண்டினுள் மூலதன மானிமாக பெற்றிருந்த ரூபா 810,000 பெறுமதியான உபகரணங்கள் மற்றும் ரூபா 119,000 பெறுமதியான கணனிககளுக்கான 2017 ஆம் ஆண்டிற்கான பெறுமானத்தேய்வு ரூபா 79,568 யினால் குறைத்து காட்டப்பட்ட காரணத்தால் நடைமுறையல்லாத சொத்துக்கள் மற்றும் மூலதன மானியங்கள் அப் பெறுமானத்தால் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.

(இ) மீளாய்வாண்டின் போது கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வண்டி பழுதுபார்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட ரூபா 5,406,380 ஆன மீண்டு வரும் செலவினத்தை மூலதன செலவினமாக கட்டிடங்கள் மற்றும் மோட்டார் வண்டி கணக்குகளிற்கு வரவு வைக்கப்பட்டிருந்தது.

(ஈ) புதிய தொழில்நுட்ப ஆய்வுகூடத் தொகுதியின் வடிவமைப்பு மற்றும் நிர்மாணத்திற்கான ஒப்பந்தத்தின் மதியுரைச் சேவை வழங்கிய நிறுவனத்திற்கு ஒப்பந்த பெறுமானத்தின் 20 சதவீத முற்பணத்துடன் வரி பணமாக ரூபா 2,056,756 மீளாய்வாண்டு இறுதியில் செலுத்துவதற்கு பரிந்துரைக்கப்பட்ட போதும் அட்டுறு செலவினமாக ரூபா 1,843,915 தொகை மாத்திரம் கணக்கிடப்பட்டமையால், நடைமுறை வேலைகள் மற்றும் கடன்கொடுத்தோர் ரூபா 212,841 யினால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தது.

(உ) மீளாய்வாண்டினுள் காப்புறுதி இழப்பீடு பெறுவனவு ரூபா 469,340 தொகை மோட்டார் வண்டி கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது. இக் காரணத்தால் நிதிக்கூற்றுக்களில் மோட்டார் வண்டிகளின் பெறுமதி ரூபா 469,340 குறைவாகவும் ஆண்டின் பற்றாக்குறை அப் பெறுமானத்தால் கூடுதலாகவும் காட்டப்பட்டிருந்தது.

(ஊ) நாரா நிறுவனத்தினால் ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்காக மதியுரை சேவை வழங்கியமைக்காக அறவிடவேண்டிய 30 சதவீதமான உரிமை பங்கு வருமானம் ரூபா 506,253 ஆக கணக்கிடப்பட வேண்டிய போதிலும் மதியுரை வருமானம் பங்கிடும் இலாபத்தின் மீது செலுத்தப்படும் 30 சதவீத ஊக்குவிப்பு படிகளின் கீழ் பொறுப்பொன்றாக கணக்கிடப்பட்டிருந்தது.

### 2.2.3 விளக்கமளிக்கப்படாத வேறுபாடுகள்

இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்தால் நாரா நிறுவனத்திற்கு பாதுகாப்பு சேவையை பெற்றுக்கொண்டமைக்காக செலுத்த வேண்டிய பணம் ரூபா 3,174,489 ஆக நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்ட போதும், இலங்கை மீன்பிடி துறைமுக கூட்டுத்தாபனத்தால் பெறப்பட்ட தகவல்களின் படி அந் நிலுவை பணம் ரூபா 6,481,007 என அவதானிக்கப்பட்டது.

### 2.2.4 கணக்காய்விற்கான சான்றுகள் இன்மை

02 ஆண்டுகளுக்கு விஞ்சிய காலமாக நிலவும் அட்டுறு செலவுகள் ரூபா 5,574,590 இற்கான கொடுப்பனவு மற்றும் பொறுப்புகளின் பெறுமதியை தயாரிப்பதற்கு தேவையான பட்டியல்கள் மற்றும் மீதிகளின் உறுதிப்பாடு போன்ற மூல ஆவனங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை.

## 2.3 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 06 மீனவ துறைமுகங்களை அபிவிருத்தி செய்வதற்காக சாத்தியப்பாட்டு ஆய்வு அறிக்கை ஒன்றை தயாரிப்பதற்காக வெளி நிறுவனமொன்றிலிருந்து 04 ஆண்டுகளுக்கு விஞ்சிய காலம் முதல் பெறப்பட வேண்டிய ரூபா 1,612,898 இனை அறவிட நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

(ஆ) 2013 ஆண்டின் சனாதிபதி செயலாளர் அலுவலகத்திற்கு விடுவிக்கப்பட்ட ஊழியர்கள் சார்பாக அறவிடப்பட வேண்டிய ரூபா 239,550 மீளாய்வாண்டினுள்ளும் அறவிட முடியாதிருந்தது.

(இ) கணனி மென்பொருள் முறைமையொன்றை நிறுவுவதற்காக 2010 ஆம் ஆண்டில் வெளி நிறுவனமொன்றிற்கு முற்பணமாக ரூபா 404,010 செலுத்தியிருந்தது. எனினும், அக் கணனி மென்பொருள் முறைமை மீளாய்வாண்டு முடிவிலும் நிறுவப்படாமை காரணமாக அப் பணத்தை மீள் அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(ஈ) பட்டப் பின்படிப்பு பாடநெறி ஒன்றிற்காக மற்றும் கடன் பணமொன்றாக நிறுவனத்தினால் இரண்டு ஊழியர்களுக்கு கொபடுப்பனவு செய்யப்பட்ட ரூபா 125,900 மூன்று ஆண்டுகள் முதல் அறவிடவேண்டியதாக நிலவியது.

## 2.4 சட்டங்கள் விதிகள் மற்றும் பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணக்கமின்மைகள்

பின்வரும் சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடன் இணக்கமின்மைக் சந்தர்ப்பங்கள் அவதானிக்கப்பட்டன.

| | சட்டங்கள்விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் தொடர்பு | இணக்கமின்மைகள் |
|---|---|---|
| (அ) | 1981 இன் 54 ஆம் இலக்க தேசிய நீரியல்வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மைச்சட்டம் | |
| (i) | சட்டத்தின் 17 ஆம் பிரிவு | சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் விஞ்ஞான மற்றும் முகாமைத்துவக் குழு நிறுவப்படாமையினால் ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி மீதான முன்மொழிவுகளை பெற்றுக்கொள்ளல், மதிப்பீடு, அங்கீகரிக்கப்பட்ட கருத்திட்டங்களின் முன்னேற்றத்தை ஆய்வு செய்தல் மற்றும் சபைக்கு முன்வைக்கப்படும் விஞ்ஞான அல்லது தொழில்நுட்ப விடயங்கள் சம்பந்தமாக ஆலோசனை மற்றும் அங்கீகாரத்தை முன்வைத்தல் போன்ற நடவடிக்கைகளை மேற்கொள்ள முடியாதிருந்தது. |

| | | |
|---|---|---|
| (ii) | சட்டத்தின் 34 ஆம் பிரிவு | முகவராண்மையினால் மேற்கொள்ளப்படும் கற்கை ஆய்வுகள், பரீட்சித்துப் பார்த்தல் மற்றும் ஏனைய விசாரணைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் மற்றும் தேடுதல்கள் தொடர்பாக பெற்றுக்கொள்ளும் தரவுகள், அறிக்கைகள் மற்றும் விபரங்கள் உள்ளடங்கிய பதிவேடு ஒன்று பணிப்பாளர் நாயகத்தினால் பேணப்பட்டிருக்கவில்லை. |

(ஆ) இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவை

| | | |
|---|---|---|
| (i) | நிதிப் பிரமாணம் 104 | 2009 ஆண்டின் போது ரூபா 411,000 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த கணனி மென்பொருள் ஒன்றினை உட்படுத்தியிருந்த கிரயம் ரூபா 52,000 ஆன கணனி ஒன்று 2012 ஆண்டின் போது காணாமல் போயிருந்தமை தொடர்பாக நிதிப் பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. |
| (ii) | நிதிப் பிரமாணங்கள் 387 மற்றும் 395 | 03 வங்கி கணக்குகளுக்காக மீளாய்வாண்டினுள் வங்கி இணக்கக்கூற்று தயாரிக்கப்பட்டிருக்காததுடன் ஓர் வங்கி கணக்கில் ரூபா 4,352 ஆன மேலதிக பற்று மீதியொன்று நிலவியது. |
| (iii) | நிதிப் பிரமாணம் 757(2) | மீளாய்வாண்டிற்கான பொருட்கள் மெய்மையாய்வு அறிக்கை கணக்காய்விற்காகச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. |

(இ) திறைசேரி சுற்றறிக்கை

| | | |
|---|---|---|
| (i) | 1978 திசெம்பர் 19 திகதிய 842 ஆம் இலக்க சுற்றறிக்கை மறறும் நிதிப் பிரமாணம் 502(2) | நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |
| (ii) | 2002 நவம்பர் 28 திகதிய ஐஏஐ/2002/02 ஆம் இலக்க சுற்றறிக்கை | கணனி, உதிரிப்பாகங்கள் மற்றும் மென்பொருட்கள் மீதான நிலையான சொத்துக்கள் பதிவேடொன்று பேணப்பட்டிருக்கவில்லை. |

## 3. நிதி மீளாய்வு

### 3.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த நிதிக்கூற்றுக்களின் பிரகாரம், மீளாய்வாண்டிற்கான முகவராண்மையின் நிதி விளைவுகள் ரூபா 34,234,444 இற்கான பற்றாக்குறையாக காணப்பட்டதுடன், அதற்கு நேர்ரொத்த முன்னைய ஆண்டின் ரூபா 3,224,167 மிகையொன்று காணப்பட்டமையால் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நிதி விளைவுகள் ரூபா 37,458,611 இனால் வீழ்ச்சியடைந்திருந்தது. மீளாய்வாண்டின் போது அரசாங்க மானியங்கள் ரூபா 43,409,230 யினால் அதிகரித்திருந்த போதிலும் ஊழியர் ஊதியம், ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செலவினம் மற்றும் ஏனைய செயற்பாட்டு செலவுகள் ரூபா 72,315,322 யினால் அதிகரித்திருந்தமை மேற்கூறிய வீழ்ச்சிக்கு முக்கியமான காரணமாக இருந்துள்ளது.

மீளாய்வாண்டினதும் கடந்த 06 வருடங்களினதும் நிதி விளைவுகளை பகுப்பாய்வு செய்யும் போது 2012 ஆண்டு முதல் 2015 ஆண்டு வரை பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்த போதிலும் 2016 ஆண்டின் போது மிகையொன்று ஏற்பட்டு மீண்டும் 2017 ஆண்டின் போது மீண்டும் பற்றாக்குறையொன்று ஏற்பட்டிருந்தது. நிதி விளைவுகளுக்கு ஊழியர் ஊதியம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு மீண்டும் சீராக்கல் மேற்கொண்ட போது 2012 ஆண்டின் போது ரூபா 123,494,212 இற்கான பங்களிப்பு மீளாய்வாண்டின் போது ரூபா 369,678,999 தொகை வரை இடையறாமல் வளர்ச்சியடைந்திருந்தது.

## 4. செயற்பாட்டு மீளாய்வு

### 4.1 செயலாற்றுகை

(அ) 1981 இன் 54 ஆம் இலக்க தேசீய நீரியல் வள ஆய்வு அபிவிருத்தி முகவராண்மை சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் முகவராண்மையினால் நன்னீர் நிலைகளில் மீன் அருவடையை மேம்படுத்தல் தொடர்பாக மற்றும் அருவடை வளர்ச்சி தொடர்பாக மதிப்பீடு மற்றும் ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டு ஆலோசணை வெளியிடப்படவில்லை.

(ஆ) மீளாய்வாண்டு தொடர்பான செயற்பாட்டு திட்டம் மற்றும் முன்னேற்ற அறிக்கை பரிசீலனையின் போது 74 ஆராய்ச்சி கருத்திட்டங்களுக்காக ரூபா 230 மில்லியன் ஒதுக்கீடு செய்யப்பட்டிருந்ததுடன் அவற்றில் வேலைத்திட்டங்கள் /68 கருத்திட்டங்களை செயற்படுத்த ரூபா 108.29 மில்லியன் செலவிடப்பட்டிருந்தது. கருத்திட்ட செயற்படுத்தலின் பௌதீக முன்னேற்றம் 24 சதவீதம் முதல் 98 சதவீதம் வரை வீச்சலவாக நிலவியதுடன் பரிசீலணைக்குற்படுத்தப்பட்ட 68 கருத்திட்டங்களின் 14 இல் அவதானிக்கப்பட்ட பழவீனங்கள் பின்வருமாறு.

(i) மீன்களை ஒன்று திரட்டும் பொறி வைக்கும் முறை மற்றும் ரேடியோ மிதவைகளை பயன்படுத்தி ஆழ்கடலில் சூரை மீன் பிடிப்பதற்காக சுற்றாடல் மற்றும் மூலவளப் பற்றுள்ள புதிய உபகரணம் ஒன்றினை செய்வதற்கான கருத்திட்டத்திற்காக முன்னைய ஆண்டில் ரூபா 1,412,535 செலவில் மீன்களை ஒன்றுதிரட்டும் 03 பொறிகள் வடிவமைக்கப்பட்டிருந்தன. அவற்றில் 01 மற்றும் 2016 செப்தெம்பர் 29 ஆம் திகதி கல்முனை பிரதேசத்தில் நிறுவப்பட்டிருந்ததுடன் மீதிப் பொறிகள் 02 உம், 2018 ஜுலை மாதம் வரையும் பயனற்று நிலவியது. நிறுவப்பட்ட மீன்களை ஒன்றுதிரட்டும் பொறி 2017 ஆண்டின் மீனவர்களால் வெட்டி அகற்றப்பட்டிருந்தது. இதன் காரணமாக செலவிடப்பட்ட ரூபா 1,412,535 தொகை விளைவற்ற செலவாக இருந்ததுடன் கருத்திட்டத்தின் நோக்கம் அடையப்படாமை அவதானிக்கப்பட்டது.

(ii) ஹம்பந்தொட்டை மாவட்டத்தை சார்ந்த பகுதிகளில் சனசமூக பங்குபற்றல் உடாக அலங்கார மீன்வளர்ப்பு மற்றும் நோய் முகாமைத்துவத்திற்காக முன்னைய ஆண்டின் போது ரூபா 1,223,300 செலவிடப்பட்டிருந்தது. மீளாய்வாண்டு மார்ச் மாதத்தினுள் சேற்றுக் குளங்களில் மீன் குஞ்சுகள் வைப்புச் செய்தல் மேற்கொள்ளப்பட வேண்டுமெனினும் அது ஜுலை 28 ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் குளங்களில் நீர் இல்லாத காரணத்தால் மீன்கள் இறந்ததனால் கருத்திட்டம் தோல்வியற்றதாக நிலவியது. மேலும் நோய் முகாமைத்துவம் தொடர்பாக போதியளவு கவனம் செலுத்தப்பட்டிருக்காததுடன் பின் தொடர் நடவடிக்கைகள் மற்றும் மதிப்பிடலும் செய்யப்படவில்லை.

(iii) களப்புகளில் மிதக்கும் வலைக் கூடுகள் சார்ந்த பகுதிகளில் மொதா மீன் வளர்ப்பிற்காக மீன் உணவுகள் மேம்படுத்தலுக்காக மேற்கொள்ளப்பட்ட ஆராய்ச்சி கருத்திட்டம் 2015 ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டிருந்ததுடன் 2017 ஆண்டு முடிவு வரை அதற்காக ரூபா 2,231,174 செலவிடப்படடிருந்தது. ஆராய்ச்சிக் கருத்திட்டம் பூரணமாவதற்காக தேவையான புத்தளம் களப்பை சார்ந்த முழு வலை கூடுகள் 27 இல் 12 மாத்திரம் நிறுவப்பட்டிருந்ததடன் மீதி 15 கூடுகளை நீறுவுவதற்கு 2017 ஆண்டு இறுதி வரையும் முடியாதிருந்தது. வலை கூடுகளிற்காக மொதா மீன்களை பெற்றுக்கொள்ளல் 2018 ஜுன் வரை தாமதமாகியிருந்தது. அதன் பிரகாரம் மொதா மீன் உணவு சேர்க்கை மேன்படுத்தல் இடம்பெற்ற போதும், மீன் உணவு சேர்க்கை இறுதி மீளாய்விற்காக தேவையான அளவுகளில் பரீட்சித்தல் மற்றும் மேன்படுத்தப்பட்ட உணவுச் சேர்க்கை பௌதீக ரீதியாக பாவணைக்கு வலை கூடுகள் அன்மித்த மொதா மீன்கள் மேன்படுத்தல் எனும் ஆராய்ச்சி கருத்திட்டத்தின் ஏனைய நோக்கங்களின் பக்கம் அன்மித்திருக்கவில்லை.

(iv) இலங்கையில் சிறு கடல்சார் மற்றும் பாரிய கடல்சார் மீன் வளங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் முகாமை செய்யும் ஆராய்ச்சிக் கருத்திட்டத்திற்காக மீளாய்வாண்டினுள் ரூபா 2,286,197 செலவிடப்பட்டிருந்தது. இக் கருத்திட்டதினூடாக அடிப்படையாக ஆண்டினுள் சிறு கடல்சார மீனவ கைதொழிலினால் மற்றும் பாரிய கடல்சார் மீனவ கைதொழிலினால் ஈட்டிக் கொண்ட அருவடை தொடர்பான தகவல்கள் நாலாதுவரையாக்கலொன்றும் மற்றும் பகுப்பாய்வொன்றும் இடம்பெற்ற போதும் இலங்கைலுள்ள சிறு கடல்சார் மற்றும் பாரிய கடல்சார் மீன் வளங்கள் மதிப்பீடு செய்யப்பட்டிருக்காததுடன் தரவுகளை பரிசீலனை செய்வதனூடாக பெறப்படும் பெருமதியான அவதானங்கள் சிறிய கடல்சார் மற்றும் பாரிய கடல்சார் மீன்பிடிக் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள மீனவர்களுக்கு பெற்றுக் கொடுக்க முறைமையொன்று தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(v) மீன்பிடி தகவல் நிலையத்தினால் ஒன்லைன் முறையில் நுகர்வோருக்கு சேவைவசதிகளை வழங்குவதற்காக கணனி மென்பொருலொன்றை மேம்படுத்த மீளாய்வாண்டில் ரூபா 710,000 ஒதுக்கப்பட்ட பொதும் 2017 திசெமபர் 31 திகதி வரையும் அந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

(vi) தேசிய கடல்சார் தேசப் படங்களை வடிவமைப்பது தொடர்பாக பௌதீக முன்னேற்றத்தை பரீட்சிக்கையில் பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

- கொழும்பிலியிருந்து வெலிகம வரை கடல்சார் தேசப் படம் வடிவமைத்தல் செயலின் கீழ் 2017 ஆண்டில் ஆழமற்ற கடலின் 900 வர்க்க கிலோ மீட்டர் மற்றும் ஆழ்கடலின் 4756 வர்க்க கிலோ மீட்டர் நீர் அளவை நடவடிக்கை மேற்கொள்ள திட்டமிடப்பட்ட போதும் மீளாய்வாண்டு முடிவில் ஆழமற்ற கடலில் 410 வர்க்க கிலோ மீட்டர் நீர் அளவை நடவடிக்கை மாத்திரம் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் ஆழ் கடலில் நீர் அளவை நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை.
- திருகோனமலையிலிருந்து தேவேந்திரமுணை வரை கடல்சார் தேசப் படம் வடிவமைத்தலின் கீழ் முழுப்படத்தின் 30,000 வர்க்க கிலோ மீட்டரில் 21,410 வர்க்க கிலோ மீட்டர் நீர் அளவை நடவடிக்கை மீளாய்வாண்டில் மேற்கொள்ள திட்டமிடப்பட்டிருந்த போதும் ஆண்டிறுதியில் 6,425 வர்க்க கிலோ மீட்டர் மாத்திரமே அளவை நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது.

- மீளாய்வாண்டில் கற்பிடிய கலப்புக்காக கடல்சார் தேசப் படமொன்றை வடிவமைக்க திட்டமிடப்பட்டிருந்த போதும் அது தொடர்பாக எவ்வித நீர் அளவை நடவடிக்கையும் 2017 ஆண்டினுள் மேற்கொள்ளப்படவில்லை.

(vii) தற்போது நிலவும் மற்றும் விஞ்ஞான ரீதியாக மேற்கொள்ளப்பட்ட பலநாள் பிரயாண கப்பல்கள் மற்றும் பேலியகொட மத்திய மீன் விற்பனை நிலையத்தில் அருவடையின் பின்னரான சேதத்தை மதிப்பீடும் கருத்திட்டத்தின் கீழ் மீளாய்வாண்டினுள் செயற்படத்துவதற்காக தற்போது நிலவும் மற்றும் புது பலநாள் பிரயாண கப்பல்களுக்காக பயனுள்ள குளிரூட்டல் முறைமையொன்றை அறிமுகம் செய்து மற்றும் அக்கப்பல்களின் மீன்களினது தரம்சார் சேதத்தை மதிப்பிடல் எனும் நடவடிக்கைகள் இனங்காணப்பட்டிருந்தது.

அதன் பிரகாரம் மீனவ கப்பல்களில் உயர் குளிரூட்டல் முறைமையொன்றுடன் பலநாள் பிரயாண கப்பல்களை வடிவமைப்பதற்காக அரச பல்கலைக்கழமொன்றுக்கு ரூபா 950,130 செலுத்தி மதியுரை சேவை அறிக்கையொன்று 2017 ஆண்டினுள் பெறப்பட்டிருந்தது. அவ்வாராயினும், மீளாய்வாண்டினுள் பலநாள் பிரயாண கப்பல்களுக்காக பயனுள்ள குளிரூட்டல் முறைமையொன்றை அறிமுகம் செய்திருக்கவில்லை. அதன் பிரகாரம் குளிரூட்டல் முறைமையொன்றுடன் பலநாள் பிரயாண கப்பல்களை அறிமுகம் செய்ய முடியாமை காரணமாக தற்போது நிலவும் மற்றும் மேம்படுத்தப்பட்ட மீனவ கப்பல்களில் தரம்சார் சேதத்தை ஒப்பிடுகையில் மதிப்பிடல் மற்றும் அருவடையின் பின்னரான சேதத்தை குறைத்தல் எனும் நோக்கங்களை அடைந்துக்கொள்ள முடியாமலிருந்தன.

(viii) நோர்வை நாட்டு உதவியுடன் இலங்கை மீன் வளத்தை மதிப்பிடும் சுய ஆய்விற்காக மீளாய்வாண்டிக்காக ரூபா 14,500,000 ஒதுக்கப்பட்டிருந்ததுடன் 2017 திசெம்பர் 31 வரை ரூபா 2,116,621 மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அதன் பிரகாரம் ரூபா 12,383,379 ஆன செலவு மிகை மதிப்பீடு செய்யப்பட்டிருந்ததாக அவதானிக்கப்பட்டது. மேலும் இக்கருத்திட்டத்திற்காக விரிவான செயற்திட்டம் மற்றும் விரிவான வரவு செலவு முன்னறிக்கை தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

(ix) தெரிவு செய்யப்பட்ட பாரிய கடலசார் மீன்களிலுள்ள பாரஉலோக துணிக்கைகளின் இடங்களின் மாற்றத்தை பரீட்சிக்கும் கருத்திட்டம் மற்றும் மட்டிகளின் விஷ உள்ளடக்கத்தை மற்றும் போஷாக்கு தன்மையை மேற்பார்வை செய்யும் கருத்திட்டத்திற்காக மீளாய்வாண்டில் முறையே ரூபா 1,362,371 மற்றும் ரூபா 1,955,463 செலவிடப்பட்டிருந்ததுடன் இக்கருத்திட்டங்களிற்கான செயலாற்றுகை அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(x) இலங்கை கடற்கறையை அன்மித்த பூமியில் கணியமணல் தொகுப்பு மற்றும் கணிப் பதிவுகள் தொடர்பான ஆராய்ச்சி இடையில் ஆராய்ச்சி மற்றும் சம்பந்த அடிப்படை பொறுப்பு வகிக்கும் ஆராய்ச்சி அலுவலரின் சேவையை இல்லாது செய்திருந்ததுடன் அப் பொறுப்பு சிரேஷ்ட வேறு ஆராய்ச்சி அலுவலர் ஒருவருக்கு பொறுப்புச் சாட்ட நடவடிக்கை எடுக்கப்படாததன் காரணமாக இவ் ஆராய்ச்சி கருத்திட்டம் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்தது. இதற்காக ரூபா 320,700 ஆன ஒதுக்கீடிலிருந்து ரூபா 180,242 அல்லது 56 சதவீதம் நிதிப் பாவணை செய்யப்பட்டிருந்தது.

(xi) சமுத்திர அவதானிப்பு மத்திய நிலையம் மற்றும் கடல் மட்ட ஒழுங்கமைப்பு மத்திய நிலையம் உருவாக்கும் கருத்ததிட்டத்திற்காக மீளாய்வாணடில் ரூபா 790,794 செலவிடப்பட்டிருந்தது. சமுத்திர அனர்த்த மதிப்பீடு தொடர்பாக குறித்த நிறுவனங்களுக்கு தொழில்நுட்ப உதவியை

வழங்குவது இம் மத்திய நிலையம் உருவாக்கப்பட்டதன் அடிப்படை நோக்கமான போதும், 2017 பெப்ரவரி முதல் இம் மத்திய நிலையத்தின் மூலம் தொழில்நுட்ப உதவியை வழங்கல் இடைநிறுத்தப்பட்டிருந்தது.

(xii) உள்ளக நீரியல் வள மற்றும் நீர்வாழ் சீவராசிகள் வளர்ப்புப் பிரிவின் மூலம் 2017 ஆண்டில் செயற்படுத்தவிருந்த கருத்திட்டமான நீர்கொழும்பு, கடொல்கெலே பூங்கா முகாமை கருத்திட்டத்திற்காக ரூபா 159,042 செலவிடப்பட்டிருந்தது. இப் பூங்காவிற்கான 03 பெயர் பலகைகளை பொறுத்தல், சிற்றுச்சுண்டிச்சாலை நிர்மாணித்தல், கழிவறை தொகுதியொன்றை நிர்மாணித்தல் மற்றும் மண்நிறைத்து ஓடுதளம் தயாரித்தல் உள்ளிட்ட சில விடயங்கள் உள்ளடங்கிய போதிலும், சிற்றுண்டிச்சாலை நிர்மாணம், மண்நிறைத்து ஓடுதளம் தயாரித்தல் போன்ற விடயங்கள் முழுமையாக பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை.

(xiii) தேசிய சமுத்திரம் மற்றும் சமுத்திர சீவராசிகள் விஞ்ஞான பிரிவினால் 2017 ஆண்டில் நடைமுறைபடுத்த உத்தேசிக்கப்பட்ட கருத்திட்டமொன்றான சமுத்திர தரவு முறைமையொன்றை மேம்படுத்துவதற்கான ரூபா 01 மில்லியன் ஏற்பாடு ஒதுக்கப்பட்டிருந்ததுடன் அதற்காக ரூபா 153,171 செலவிடப்பட்டிருந்தது. எனினும் அந் நடவடிக்கை 2017 ஆண்டு முடிவின் போது பூர்த்தி செய்யப்பட்டிருக்காததுடன் நிதிப்பயன்பாடு 15 சதவீதம் மாத்திரம் ஆனது.

### 4.2 முகாமைத்துவ தொழிற்பாடுகள்

முகவராண்மையின் கற்பிட்டி ஆய்வு மத்திய நிலையம், கப்பரதொட்ட நாரா பிராந்திய மத்திய நிலையம் மற்றும் ரெக்கவ பிராந்திய மத்திய நிலையம் என்பன அமைந்துள்ள மொத்தப் பெறுமதி ரூபா 53,400,900 தொகைக்கான காணிகளை முகவராண்மைக்கு சுவீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.3 சர்ச்சைக்குரிய தன்மையுள்ள கொடுக்கல் வாங்கல்கள்

முகவராண்மையின் குறிக்கோள்களுக்கு புறம்பாக ரூபா 15,245,000 தொகை செலவிடப்பட்டு பேருவளையில் நிர்மாணிக்கப்பட்டிருந்த மீன் விற்பனை நிலையம் 2014 மார்ச் 21 திகதி முதல் எவ்வித கருமங்களுக்காகவும் பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது. மேலும் இந்த நிர்மாண வேலைகள் தொடர்பான காணிகள் முகவராண்மைக்கு முறைப் பிரகாரம் சுவீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 4.4 விளைவற்ற மற்றும் குறைவாகப் பயன்படுத்தப்படும் சொத்துக்கள்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) சிற்றுண்டிச்சாலைக்காக கொள்வனவு செய்திருந்த ரூபா 120,000 தொகைக்கான தந்தூரி அடுப்பு மற்றும் ரூபா 352,800 தொகைக்கான பீங்கான் கழுவும் இயந்திரம் 2011 ஆண்டு முதல் 2018 ஜூலை 31 திகதி வரையும் பயன்படுத்தப்படாமல் செயற்படாது காணப்பட்டது.

(ஆ) 2014 ஏப்ரல் மாதத்தின் போது ரூபா 76,800 தொகைக்கு கொள்வனவு செய்திருந்த கணனி மென்பொருள் ஒன்று 2018 செப்தெம்பர் வரை பயன்படுத்தாமல் காணப்பட்டது.

(இ) பிரதேச அலுவலகங்களில் பேனப்பட்ட 03 வங்கி கணக்குகளின் ரூபா 675 ஆன தொகை 2002 ஆண்டு முதல் மற்றும் வங்கி கணக்கொன்றில் ரூபா 97,768 ஆன தொகை 2015 ஆண்டு முதல் விளைவற்றதாக நிலவியது.

## 4.5 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

02 படகுகளை உற்பத்தி செய்வதற்காக இரண்டு அதிவிசைப் படகு என்ஜின்களை கொள்வனவு செய்வதற்காக 2011 ஆண்டின் போது ரூபா 4,493,052 தொகையும் 02 படகுகள் உற்பத்தி செய்யும் நடவடிக்கைக்காக ரூபா 2,902,938 தொகையும் செலவிடப்பட்டிருந்த போதிலும் அவ் உற்பத்தி நடவடிக்கைகள் இடை நிறுத்தப்பட்டிருந்தன.

## 4.6 முறைசாரா விதமாக ஒப்படைக்கப்படாத காணிகளில் செயற்திட்டங்கள் ஆரம்பித்தல்

தேசிய நீரியல் வளர்ப்பு அதிகார சபைக்கு உரித்துடைய பனாப்பிட்டிய பிரதேசத்தில் அமைந்துள்ள காணி ஒன்றின் உரிமையை முகவராண்மைக்கு சுவீகரித்துக்கொள்ளப்படாமல் கடந்த ஆண்டின் போது முகவராண்மையினால் ரூபா 552,906 தொகை செலவிடப்பட்டு நிர்மாண வேலைகள் மேற்கொள்ளப்பட்டிருந்த போதிலும் மீளாய்வாண்டிலும் அக் காணியை சுவீகரித்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 4.7 வேறு அரச நிறுவனங்களுக்கு வழங்கியிருந்த முகவராண்மையின் வளங்கள்

முகவராண்மையின் ஆறு உத்தியோகத்தர்கள் வரிசை அமைச்சுக்கு மற்றும் வேறு நிறுவனங்களுக்கு விடுவிக்கப்பட்டு முகவராண்மையினால் மீளாய்வாண்டின் போது சம்பளம் மற்றும் படிகளாக ரூபா 2,125,777 தொகை செலுத்தப்பட்டிருந்தது.

## 4.8 பதவியணியினர் நிருவாகம்

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) முகவராண்மையின் நிருவாக பிரிவின் சிரேஷ்ட மட்டத்தில் 02 பதவிகள் 2016 ஏப்ரல் 30 திகதி மற்றும் 2017 ஒக்தோபர் 31 திகதி முதல் வெற்றிடமாக நிலவியதுடன் அப் பதவிகளுக்கு அலுவலர்களை நியமிப்பதற்கு 2018 ஜுலை 25 திகதி வரையும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) 2017 திசெம்பர் 31 திகதி வரையும் ஆராய்ச்சி நடவடிக்கைகளுக்கு நேரடியாக தொடர்புடைய 27 பதவிகளில் 95 வெற்றிடங்கள் மற்றும் 25 உதவி சேவை பதவிகளில் 42 வெற்றிடங்கள் நிலவியது. இந்த பதவிகளில் வெற்றிடங்கள் தொடர்ந்தும் நிலவியதனால் முகவராண்மையின் பிரதான நோக்கங்களை அடைந்து கொள்வது தொடர்பில் பாதகமான தாக்கத்தினை ஏற்படுத்துவதாக அவதானிக்கப்பட்டது.

## 5. நிலையான அபிவிருத்தி

## 5.1 நிலையான அபிவிருத்தி நோக்கினை அடைந்து கொள்ளல்

நிலையான அபிவிருத்தி தொடர்பான ஐக்கிய நாடுகளின் 2030 ஆண்டு ‘‘நிகழ்ச்சிநிரல்’’ பிரகாரம் ஒவ்வொரு அரச நிறுவனத்தினாலும் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டியதுடன், மீளாய்வாண்டு தொடர்பாக முகவராண்மையினால் தனது விடயப் பரப்பிற்குற்படும் வேலைகள் தொடர்பாக செயற்பட்டிருந்தமை அது தொடர்பாக வெளியிடப்பட்ட வினாத் தொடரிற்கு விடையாக காட்டப்பட்டிருந்தது. எவ்வாராயினும் முகவராண்மையினால் அதன் வேலைகள் தொடர்பான நிலையான அபிவிருத்தி நோக்கங்கள், இலக்குகள் மற்றும் அவ் இலக்குகளை நோக்கி சென்றடைய வேண்டிய திருப்புமுனைகள், இலக்குகளை அடைவதனை அளப்பதற்கான குறிகாட்டிகளை அறிந்து கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

## 6. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 6.1 நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பித்தல்

2003 ஜூன் 02 ஆம் திகதிய பீஈடி/12 இலக்க பொது முயற்சிகள் சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தியின் பிரகாரம் நிதியாண்டு முடிவடைந்து 60 நாட்களில் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட வேண்டும். எனினும், முகவராண்மையினால் மீளாய்வாண்டிற்காக நிதிக்கூற்றுக்கள் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது 49 நாட்கள் தாமதத்துடன் அதாவது 2018 ஏப்ரல் 18 திகதியே. மேலும் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரைபு வருடாந்த அறிக்கையினை சமர்ப்பித்திருக்கவில்லை.

### 6.2 உள்ளகக் கணக்காய்வு

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) உள்ளகக் கணக்காய்வு பிரிவினால், மீளாய்வாண்டில் 21 கணக்காய்வு ஐயவினாக்கள் வெளியிடப்பட்டிருந்ததுடன், அதில் 05 ஐயவினாக்களுக்கு மாத்திரம் பதில் அளிக்கப்பட்டிருந்தது. அப் பதில்களின் கணக்காய்வு ஐயவினாக்களில் காட்டப்பட்ட அவதானிப்புகளுக்குரிய எடுக்கப்பட்ட சீராக்கல் நடவடிக்கைகள் உள்ளடக்கப்பட்டிருக்கவில்லை.

(ஆ) முகவராண்மையின் உள்ளக கணக்காய்வு பரப்புக்கு, பெறுகைகள் நடவடிக்கைகள், முறைமை கட்டுப்பாடுகள், பொது பேரேடு மற்றும் மாதாந்த கணக்குகள், கடன் மற்றும் முற்பணம், ஆராய்ச்சி கருத்திட்ட முன்னேற்றம் உள்ளடங்களான விரிவான பரப்பொன்று உள்ளடக்கப்பட்டிருந்த போதிலும் உள்ளக கணக்காய்வு பதவியணியினர் பிரதான உள்ளக கணக்காளர் உள்ளிட்ட 04 அலுவலர்களுடன் வரையறுக்கப்பட்டிருந்தது.

### 6.3 கணக்காய்வு குழு

மீளாய்வாண்டில் முகவராண்மையினால் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவ குழு கூட்டம் 03 தடவைகள் மாத்திரம் நடாத்தப்பட்டிருந்தது.

### 6.4 தீர்க்கப்படாத கணக்காய்வு பந்திகள்

கரையோர வலயத்தில் ஆய்வு நடவடிக்கைகளுக்காக 2012 ஆண்டின் போது ரூபா 15,685,632 தொகை செலவிடப்பட்டு நிர்மாணிக்கப்பட்டிருந்த ''தரணீ'' படகினை மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட விடயத்திற்காக பயன்படுத்தியிருக்கவில்லை. 2014 நவம்பர் 12 ஆம் திகதி நடைபெற்ற பொது முயற்சிகளுக்கான குழுக் கூட்டத்தில் குறிப்பிட்ட படகு விற்பனை செய்யப்பட வேண்டும் என கட்டளையிடப்பட்டிருந்த போதிலும் 2017 திசெம்பர் 31 திகதி வரை விற்பனை செய்யப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும் இந்த படகு நிர்மாணிக்கப்பட்ட நாள் முதல் மீளாய்வாண்டு இறுதி வரை படகில் கடமையாற்றும் உத்தியோகத்தரின் சம்பளங்கள், மேலதிக நேரப்படி மற்றும் பாதுகாப்பு விடயங்களுக்காக ரூபா 9,758,290 தொகை செலவிடப்பட்டிருந்தது.

### 6.5 பெறுகைகள் மற்றும் ஒப்பந்த நடவடிக்கைகள்

#### 6.5.1 பெறுகைகள்

கடற்படை ஆராய்ச்சி கட்டிடம் புனர்நிர்மாண ஒப்பந்தம் தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) பெறுகைகள் குழு தீர்மானம் பிரகாரம் ICTAD பதிவுள்ள ஒப்பந்தகாரர்களிடமிருந்து விலை மனு கோரலுக்காக 2017 நவம்பர் 02 ஆம் திகதி பெறுகைகள் குழுவின் அனுமதி பெறப்பட்டிருந்ததுடன் இந்தக் குழுவிற்கு இரண்டு உறுப்பினர்கள் மாத்திரமே சமூகமளித்திருந்தனர்.

(ii) தனியார் நிறுவனமொன்றிற்கு வழங்கப்பட்டிருந்த ஒப்பந்தத்திற்கான ஒப்பந்த உடண்படிக்கையின், ஒப்பந்த கால எல்லை குறிப்பிட்டு காட்டப்பட்டிருக்காததுடன், தனியார் நிறுவனத்துடன் கைச்சாதிடப்பட்டிருந்த ஒப்பந்த உடண்படிக்கையின் பிரகாரம், பழுதுபார்பதற்கான வேலைகளை பூர்த்தி செய்வதற்கு 63 நாட்களான காலப்பகுதியை குறிப்பிட்டிருந்தது. எவ்வாராயினும், அவ் ஒப்பந்தத்தின் இறுதி பற்றுச்சீட்டு 2018 மே மாதத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் எதிர்பார்த்த கால எல்லையை விட 2½ மாதங்களான காலம் தாமதித்திருந்தது.

(iii) பெறுமதி ரூபா 5,519,645 செலவிடப்பட்ட கட்டிடத்தின் காற்றுப்பதனாக்கி முறைமை மற்றும் ஏனைய உள்ளக மின்சார வேலைகள் நிறுவனத்தினால் பூர்த்தி செய்வதற்கு பொறுப்பெடுக்கப்பட்டிருந்தது. இங்கு சகல பழுதுபார்தல் வேலைகளுக்காக 2017 ஜுலை மாதம் முதல் 2018 ஜுன் வரை ஓராண்டிற்கு அண்மித்த காலமொன்று கடந்திருந்த போதும் 2018 செப்தெம்பர் 19 ஆம் திகதி வரையும் மேல் குறிப்பிட்ட கட்டிடத்தை பாவனைக்கு உகந்த மட்டத்திற்கு பழுதுபார்க்கும் நடவடிக்கைகள் பூர்த்தி செய்யப்பட்டிருக்கவில்லை. அதன் படி பெறுகைகள் வழிகாட்டியின் 4.1 பிரகாரம் ஒப்பந்தம் பொதிகட்டுதல், சிக்கனம் மற்றும் வினைத்திரனை பெற்றுக்கொள்ள முடியுமான முறைமையாக பயன்படுத்தப்பட வேண்டிய போதிலும் இங்கு ஒப்பந்த பொதிகட்டலின் சாதகங்களை பெற்றிருக்கவில்லை என அவதானிக்கப்பட்டன.

## 7. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

கணக்காய்வின் போது அவதானிக்கப்பட்ட முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டு குறைபாடுகள் அவ்வப்போது முகவராண்மையின் தலைவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதுடன் பின்வரும் கட்டுப்பாட்டு பரப்புகள் தொடர்பாக விஷேட கவனம் தேவைப்படுகின்றது.

| | முறைமைகள் மற்றும் கட்டுப்பாட்டுப் பரப்பு | அவதானிப்புக்கள் |
|---|---|---|
| (அ) | உள்ளகக் கணக்காய்வு | போதியளவு ஆளணி இல்லாமையினால் மற்றும் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப்படாமை. |
| (ஆ) | பதவியணியினர் நிருவாகம் | வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (இ) | பண்டக் கணிப்பீடு | வருடாந்த கணிப்பீடு மேற்கொள்வதில் தாமதம் காணப்படல். |
| (ஈ) | கடன்பட்டோர் | 2017 திசெம்பர் 31 திகதிக்கு கடன்பட்டோர் மீதி உறுதிப்படுத்தல் பெற்றுக்கொள்ளாமை. |

| | | | |
|---|---|---|---|
| (உ) | செயற்பாட்டுக் கட்டுப்பாடு | - | மீனவர் சமூக அபிவிருத்தி மற்றும் மேம்படுத்தலுக்காக நிறுவப்பட்டுள்ள மீனவத் தொழிலுடன் தொடர்புடைய நிறுவனங்களின் பிரச்சினைகளை இனங்கண்டு தேவையான ஆய்வுகள், ஆராய்ச்சிகள் மற்றும் ஆலோசனைகள் வழங்குவதற்காக திட்டமிடாமை. |
| | | - | மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகள் மீனவச் சமூகத்தவர்களிடம் பிரசித்தப்படுத்துதல், அவற்றை அபிவிருத்தி செய்தல் மற்றும் அதற்கு தேவையான ஆலோசனைகள் ஒழுங்கு முறைப்படி வழங்குவதற்கு போதியளவு வேலைத்திட்டமொன்று காணப்படாமை. |
| | | - | நன்னீர் நீர்தேக்கங்களில் நீரை காலத்திற்கு காலம் பரிசோதனை செய்தல் மற்றும் நன்னீர் மீன்களை மேம்படுத்தல் தொடர்பாக தேவையான ஆய்வுகள் மேற்கொள்ளப்படாமை. |
| | | - | நன்னீர் மீன் விளைச்சல்கள் தொடர்பாக கணிப்பீடுகள் மேற்கொள்ளப்படாமை. |
| | | - | ஆய்வுகளுக்கு தேவையான தரவுகள் சேகரிக்கப்படாமை மற்றும் தகவல் நிலையமொன்றாக செயற்படாமை. |
| | | - | ஆய்வு அறிக்கைகளை அவை தொடர்பாக அக்கரையுடைய தரப்பினருக்கு வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்காமை. |
| (ஊ) | கணக்கீட்டு மென்பொருள் முறைமை. | - | கணக்கீட்டு முறைமைக்கு கொடுப்பனவு வவுசர், பற்றுச்சீட்டு மற்றும் ஜேனல் வவுசர் உள்ளடக்குதல், உறுதிப்படுத்தல் மற்றும் பேரேட்டிக்கு உள்ளடக்குதல் ஓரே அலுவலருக்கு ஒப்படைத்திருத்தல். |
| | | - | கணக்கீட்டு முறைமையின் நிருவாகியாக நிதிப் பிரிவின் சிரேஷ்ட உத்தியோகத்தரான நிதிப் பணிப்பாளர் செயற்படாமை. |
| | | - | நிதிப் பணிப்பாளர் அறியாமல் கணக்கீட்டு முறைமையின் தரவுகளை மாற்றுதல், தரவுகள் அழித்தல் மற்றும் போலியான தரவுகளை உட்புகுத்துதலுக்கு சந்தர்ப்பங்கள் அளிக்கப்பட்டிருந்தமை. |
| | | - | கணக்கீட்டு முறைமையிற்கு உட்செல்ல முகவராண்மையின் உள்ளகக் கணக்காய்வாளருக்கு மற்றும் அரச கணக்காய்வு உத்தியோகத்தர்களுக்கு தேவையான வசதிகள் வழங்கப்படாமை. |

- கணக்கீட்டு முறைமையின் பொது பேரேட்டினுள் கணக்குகள் உருவாக்கப்படும் போது தேவையற்ற கணக்குகள் உருவாக்கப்பட்டதன் காரணமாக பொது பேரேட்டை பயன்படுத்தல் மற்றும் பரீட்சை மீதியை பயன்படுத்தல் சிக்கலாக இருத்தல்.

- கணக்கீட்டு முறைமையின் பெரேட்டு கணக்குகள் குறியீடிடப்படாததன் காரணமாக பரீட்சை மீதியை மற்றும் பேரேட்டு கணக்குகளை ஒப்பிட்டு பரிசீலிப்பது மிகவும் சிக்கலாக இருந்தமை.

- வருடாந்த பாதீட்டிற்கு அமைய ஏதேனும் குறித்த திகதியில் உண்மை செலவுகளை ஒப்பிட்டு பாதீட்டுக் கட்டுப்பாடொன்றை நடாத்திச் செல்லக்கூடிய வகையில் கணக்கீட்டு முறைமையில் வசதிகள் ஏற்படுத்திக் கொள்ளாமை.